# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, பத்மநாபா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1993, ஜூலை மாதம் 29 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

*1993, ஜூலை 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

1993 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, பத்மநாபா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1993, ஜூலை மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ.13/92

4017

பத்மநாபா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"பத்மநாபா மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும்: முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, பத்மநாபா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பத்மநாபா மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படக்கூடியவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பத்மநாபா மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறு வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும், திருத்தவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். பத்மநாபா மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) வறியோருக்கு உதவுதலும், வறுமையை ஒழித்தலும்;

(ஆ) இலங்கையர்களிடையே சமாதானத்தையும், இன, மத ஒற்றுமையையும் மேம்படுத்தல்;

(இ) பெண்களையும், பிள்ளைகளையும் பாதுகாத்தலும், அனுகூலம் குறைந்த ஆட்களுக்கு உதவுதலும்;

(ஈ) வன்செயல்களினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட ஆதனங்களைப் புனரமைப்பதிலும் ஆட்களுக்கு புனர்வாழ்வளிப்பதிலும் துணைபுரிதல்;

(உ) வறியோரினதும் அனுகூலம் குறைந்தோரினதும் சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தலும், அதற்கு உதவிசெய்தலும்;

(ஊ) சூழல் பாதுகாப்பை மேம்படுத்தலும், அதில் உதவுதலும்;

(எ) தகுதியுடைய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் அனுகூலம் குறைந்த ஆட்களுக்கு மானியக் கொடைகளையும் வழங்குதல்:

(ஏ) கருத்தரங்குகளையும், கலந்துரையாடல்களையும், வேலைக்களங்களையும் நடாத்துவதன்மூலம் இக்குறிக்கோள்களை மேம்படுத்துவதில் ஈடுபடுவதற்கு ஆட்களுக்குப் பயிற்சியளித்தல்;

(ஐ) இக்குறிக்கோள்களின் நோக்கங்களுக்காக ஆராய்ச்சி நடாத்துதலும் அத்துடன் கல்விசார் மற்றும் தகவல்சார் செய்திகளை வெளியிடுதலும், மெய்நிகழ்வானவையும் கல்விசார்ந்தவையுமான திரைப்படங்களையும், வீடியோக்களையும், பதிவுநாடாக்களையும் தயாரித்தலும்;

(ஒ) காலஞ்சென்ற திரு. க. பத்மநாபாவை நினைவுகூரும் முகமாக வருடாந்தோறும் விரிவுரை நடாத்துதல்; அத்துடன்

(ஓ) இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய மேலே கூறப்பட்ட குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய வேறு செயல்களை அல்லது காரியங்களைச் செய்தல்;

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயல்படுத்தல், முடிவுறுத்தல் என்பன

வற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பனவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்,

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கையினரான பணிப்பாளர்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்தியநாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் பணிப்பாளர் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் விசேட பொதுக்கூட்டம் ஒன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின், குறைந்தது மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப் பெறுதல், வெளியேற்றல் என்பனவற்றுக் காகவும், உறுப்பினர்களை வகைப்படுத்துவதற்காகவும், கூட்டங்களில் வாக்களிக்க அவர்களுக்குள்ள உரித்துவத்திற்காகவும், பணிப்பாளர் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களில் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் பொதுவில் வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்தப்பெறுவதற்காகவும் இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும், அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம் அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.

மன்றத்திற்கு வருமதியானதும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

7. இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

8. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது குத்தகை மூலமாகவோ, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்கு உரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையிலான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது. அவர்கள் தாம் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி, கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

வருமானத்தைப் பயன்படுத்தல்

10. கூட்டுத்தாபனத்தின் வருமானம் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் வருமானமோ, சொத்துக்களோ அல்லது அதன் எப்பாகமோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது:

ஆயின், பணிப்பாளர் சபையின் கூட்டங்களுக்கு வருகைதருவதில் உறப்பட்ட செலவுகள் பணிப்பாளர் ஒருவருக்கு மீளளிக்கப்படலாம்.

கலைத்தலின் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்

11. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது, எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருக்குமாயின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைப்போன்ற, அல்லது அவற்றை ஒத்த நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கென பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்

12. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பாதித்தலாகாது அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

13. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏதாவும் காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை. கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.